# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, நவீன தொழினுட்பவியல்களுக்கான ஆதர் சி. கிளாக் நிலையச் சட்டம்

---

*[1984, ஜூலை மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, ஜூலை மாதம் 06 ஆந் தேதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

---

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

*விலை : ரூபா 1.50* *தபாற் செலவு : சதம் 90*

# 1984 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, நவீன தொழினுட்ப வியல்களுக்கான ஆதர் சி. கிளாக் நிலையச் சட்டம்

[1984, ஜூலை மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 20/83
1576

நவீன தொழினுட்பவியல்களுக்கான ஆதர் சி. கிளாக் நிலையத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், செய்தித்தொடர்புகள், கணனிகள், சக்தி, விண்வெளித் தொழினுட்பவியல்கள், மற்றும் இயந்திர மனித வியல் என்பனவற்றின் கற்கைக்கு ஏற்பாடுசெய்வதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமான ஒரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1984 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, நவீன தொழினுட்பவியல்களுக்கான ஆதர் சி. கிளாக் நிலையச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

## பாகம் I

### நவீன தொழினுட்பவியல்களுக்கான ஆதர் சி. கிளாக் நிலையம்

2. (1) "நவீன தொழினுட்பவியல்களுக்கான ஆதர் சி. கிளாக் நிலையம்" என அழைக்கப்படவேண்டிய (இதனகத்துப்பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிலையமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். நவீன தொழினுட்பவியல் களுக்கான நிலையத்தைக் கட்டிணைத்தல்.

(2) நிலையமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர் மூலம், இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றுங் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன் அப்பெயரில் வழக்குத் தொடரலாம், அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

(3) நிலையத்தின் இலச்சினையானது—

(அ) சபையானது காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய ஆளினது கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ; அத்துடன்

(இ) சபையின் அனுமதியுடன் தவிரவும் ஆங்கவணிருந்தனரென்பதற்கு அடையாளமாக ஆவணத்தில் ஒப்பமிடவேண்டியவர்களான சபையில் இரண்டு உறுப்பினர்களின் சமூகத்திலன்றியும் ஏதேனும் ஆவணத்தின் மீது பொறிக்கப்படுதல் ஆகாது.

2—எ 076544—2,675 (05/84)

நிலையத்தின் இலக்குகளும் குறிக்கோள் களும்.

3. பயிற்சி மற்றும் ஆராய்ச்சி வசதிகளை ஏற்பாடுசெய்வதன் மூலம் செய்தித்தொடர்புகள், கணனிகள், விண்வெளி தொழினுட்பவியல்கள், சக்தி மற்றும் இயந்திர மனிதவியல் ஆகிய துறைகளில் நவீன தொழினுட்பவியல்களை அறிமுகப்படுத்தி அபிவிருத்தி செய்யும் செய்முறையைத் துரிதப்படுத்தலும் அத்துடன் குறிப்பாக பின்வருவனவற்றைச் செய்தலும் நிலையத்தின் இலக்குகளும் குறிக்கோள்களுமாதல் வேண்டும் :—

(அ) மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் இயைபான கற்கைநெறிகளில் பேராசிரியர், ஆராய்ச்சி இணையுரிமை உறுப்பினர் நிலைகளை நிறுவுதலும் பட்டதாரி மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கை நெறிகளை ஊக்குவித்தலும் ;

(ஆ) சேவைக்காலப் பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் என்பனவற்றின் மூலம் செய்மதி மற்றும் புவிசார் செய்தித் தொடர்புத் தொடுப்புகளுக்கும், தாவுவகைகளுக்கும், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலிபரப்புக்கும், ஒளிபரப்புக்கும் கணனி வன்கலங்களையும் மென்கலங்களையும் அபிவிருத்தி செய்வதற்கும் தேவைப்படும் ஆளணியினருக்குப் பயிற்சியளித்தல் ;

(இ) நவீன தொழினுட்பவியல்களைப் பிரயோகிப்பதிலும் கைத்தொழிலுக்கு அவசியமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைத் தாபிப்பதிலும் கைத்தொழில், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு ஆதாவளித்தல் உட்பட, ஆலோசனைச் சேவைகளை ஏற்பாடுசெய்தல் ;

(ஈ) செய்தித் தொடர்புகள், கணனி தொழினுட்பவியல்கள், சக்திக் கற்கைகள் மற்றும் இயந்திர மனிதவியல்கள் என்பவற்றில் போதிப்பதனையும் ஆராய்ச்சி செய்வதனையும் கொண்டுநடாத்தி அபிவிருத்தி செய்வதற்குத் தேவைப்படும் கட்டடங்களையும், நூலகங்களையும் ஆராய்ச்சி ஆய்கூடங்களையும் கட்டியமைத்து, சாதனம் பொருத்தி பேணுதலும், ஏனைய சேவைகளை ஏற்பாடுசெய்தலும் ;

(உ) இலங்கையினதும் அபிவிருத்தி அடைந்துவரும் ஏனைய நாடுகளினதும் தேவைகளைச் சமாளிக்கும் வகையில் செய்தித்தொடர்பு மற்றும் கணனி தொழினுட்பவியல்களின் பிரயோகத்தில் ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் ஆரம்பித்தலும், ஊக்குவித்தலும், நடாத்தலும் ;

(ஊ) குறிப்பாக கிராமிய செய்தித் தொடர்பு மற்றும் கணனிப் பிரயோகங்கள் என்பனவற்றில் மாற்றுச் சக்தி மூலவளங்களின் பயன்பாடு பற்றி ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் ஆரம்பித்து ஊக்குவித்தல் ;

(எ) இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் உள்ள தொழினுட்ப வேலையாட்களுடனும் தொழினுட்ப நிறுவனங்களுடனும் இணைப்பினைத் தாபித்தலும் பேணுதலும், நிலையத்தின் இலக்குகளுடனும் குறிக்கோள்களுடனும் தொடர்புபட்ட கருமங்களில் சருவதேசிய கூட்டுறவை மேம்படுத்தலும் ;

(ஏ) பொதுசனச் செய்தித் தொடர்புத்துறைச் சிறப்பறிஞர்களுக்கு உயர் பயிற்சி ஏற்பாடுசெய்தல் ;

(ஐ) நிலையத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக கொடைகளை, அறக்கொடைகளை அல்லது புலமைப் பரிசில்களை வழங்குதல் ; அத்துடன்

(ஒ) நிலையத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் ஊக்குவிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஏனைய செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

## பாகம் II

### நிலையத்தை நிருவகித்தல்

சபை உறுப்பினர்கள்.

4. (1) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட, (இச்சட்டத்தில் "சபை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) ஆளுநர் சபையொன்றினால் நிலையத்தின் அலுவல்கள் நிருவகிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) பின்வரும் நான்கு பதவிவழி உறுப்பினர்கள் :—

(i) உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ii) மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ;

(iii) இலங்கை கணனி மற்றும் தகவல் தொழினுட்பவியல் பேரவைத் தவிசாளர் ; அத்துடன்

(iv) 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட நிலையத்தின் பணிப்பாளர்.

(ஆ) அமைச்சரின் ஆலோசனையுடன் சனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டிய ஆறு உறுப்பினர்கள் ; இவர்களுள் நால்வர் செய்தித் தொடர்புகள், கணனிகள், விண்வெளி மற்றும் சக்தி தொழினுட்பவியல்கள் என்பனவற்றின் பிரயோகத்தில் அல்லது அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ளவர்களாக அல்லது தொழில்சார் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும் ; அத்துடன் இவர்களுள் இருவர் நிலையத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக்கொண்ட ஏதேனும் நிறுவனத்தின் வேலை தொடர்பில் உயர் தொழிற்றகைமை உடையவர்களும்—

(i) இலங்கையில் வதிகின்ற,

(ii) நிலையத்துக்கு நிதிகளை ஏற்பாடுசெய்கின்ற ஏதேனும் ஒழுங்கமைப்பில் வேலையில் ஈடுபட்டுள்ள ; அல்லது

(iii) நிலையத்துக்கு கணிசமான நிதி உதவி செய்கின்ற நாடுகளில் வதிகின்ற,

ஆட்களிலிருந்து தெரிவுசெய்யப்படக்கூடியவர்களுமான ஆட்களாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) [11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட] தொழினுட்ப ஆலோசனைப் பேரவையினால் அதன் உறுப்பினர் களிலிருந்து தெரிவுசெய்யப்படும் இரண்டு உறுப்பினர்கள். இவர்களுள் ஒவ்வொருவரும் மூன்றாண்டுகளுக்கு அல்லது பேரவை உறுப்பினராக அவர் இல்லாதொழியும்வரை, இவற்றில் எத்தேதி முந்தியதோ அத்தேதிவரை பதவி வகித்தல் வேண்டும்.

(2) சனாதிபதி, அமைச்சரின் ஆலோசனையுடன் சபையின் தவிசாளராக வும் துணைத் தவிசாளராகவும் இருக்கவேண்டிய இரண்டு ஆட்களை சபை உறுப்பினர்களிலிருந்து நியமித்தல் வேண்டும்.

(3) இறப்பதன் மூலம், பதவி விலகுவதன்மூலம் அல்லது பதவியி லிருந்து அகற்றப்படுவதன்மூலம் ஏற்பட்ட, சனாதிபதியினால் நியமிக்கப் பட்ட உறுப்பினர் ஒருவரின் வெற்றிடம் சனாதிபதியினாலேயே நிரப்பப்படு தல் வேண்டும். வெற்றிடமொன்றை நிரப்புவதற்கென அவ்வாறு நிய மிக்கப்பட்ட எவரேனும் ஆள் தமக்கு முன்னிருந்தவரின் பதவிக் காலத் தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(4) நாலாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறப்பதன் மூலம் அல்லது பதவி விலகுவதன்மூலம் அல்லது தொழினுட்ப ஆலோசனைப் பேரவையில் உறுப்பினர் ஒருவர் என்ற பதவியை வகிக்காதொழிவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் ஏற்படும் ஒரு வெற்றிடம் தொழி னுட்ப ஆலோசனைப் பேரவையினால் அதன் உறுப்பினர்களுள் ஒருவரைத் தெரிவுசெய்வதன் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும்; அத்துடன் அவர் தமக்கு முன்னிருந்தவரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(5) நாலாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அல்லது 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் தொழினுட்ப ஆலோசனைப் பேரவையினால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் எந்நேரத்திலும் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதமூலம் தமது பதவியிலிருந்து வில கலாம்; அத்துடன் அத்தகைய பதவி விலகலானது ஏற்றுக்கொள்ளப்பட் டுள்ளதென அத்தகைய உறுப்பினர்களுக்கு சனாதிபதி அறிவிக்கும்வரை பயனுடையதாதல் ஆகாது.

(6) இப்பிரிவின் கீழ் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒரு வர், காரணம் எதுவும் குறித்தொதுக்கப்படாது அவரினால் எந்நேரத்தி லும் பதவியிலிருந்து அகற்றப்படலாம், அத்துடன் அத்தகைய அகற் றுகை நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதல் ஆகாது.

சபையின் நடவடிக்கைகள்.

5. (1) தவிசாளர் அல்லது அவரில்லாதபோது துணைத் தவிசாளர் அல்லது இருவரும் இல்லாதபோது சபையின் எக்கூட்டத்திலும் சமுக மாயிருக்கும் உறுப்பினர்களினால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர் ஒரு வர் அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) சபையானது அவசியமாகக்கூடியவாறாக அடிக்கடி சாதாரண அமர்வுகளையும் அதன் கடல்கடந்த உறுப்பினர்கள் பங்குபற்ற ஏற்பாடு செய்யும் வகையில் ஆண்டுக்கொருதடவை பூரண அமர்வையும் நடாத்துதல் வேண்டும்.

(3) கடிதத் தொடர்பு மூலம் பெறப்பட்ட கடல் கடந்த உறுப்பினர்களின் கருத்துக்கள் சபையின் சாதாரண கூட்டங்களில் முன்வைக்கப்படுதல் வேண்டும்.

(4) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக சபையானது அதன் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதற்கான நடைமுறை பற்றிய விதிகளை ஆக்கலாம்.

சபை உறுப்பினர்களுக்கான ஊதியம்.

6. சனாதிபதி தாம் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஆட்களுடனான ஆலோசனையுடன் தீர்மானிக்கும் அத்தகைய படியும் வேறு ஊதியமும் சபை உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

ஏதேனும் வெற்றிடம் அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக சபையின் செயல் அல்லது நடவடிக்கைகள் செல்லுபடியற்றனவாகக் கருதப்படாமை.

7. சபை உறுப்பினரிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படமாட்டாது.

சபை உறுப்பினராக மீள நியமிக்கப்படுவதற்குள்ள தகைமை.

8. இச்சட்டத்தின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்படும் உறுப்பினர் ஒருவர் தவிர்ந்த, பதவியை வறிதாக்குகின்ற சபையின் எவரேனும் உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

சபையின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்.

9. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுக்கும் அமைவாக, சபையானது அதன்குறிக்கோள்களைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமானவையான அல்லது உசிதமானவையான அல்லது இடைநேர்விளைவானவையான எல்லா விடயங்களையும் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம் :—

(அ) நிலையத்தின் கொள்கை உருவாக்கும் குழுவாகச் செயலாற்றுதலும் கொள்கையளவில் அதன் பாரிய நிகழ்ச்சித் திட்டங்களைவகுத்தலும் அல்லது அங்கீகரித்தலும் ;

(ஆ) நிலையத்தின் நிதிகளை வைத்திருத்தல், கட்டுப்பாடு செய்தல் அத்துடன் நிருவகித்தல் ;

(இ) ஏதேனும் கொள்வனை, கொடை, நன்கொடை, மரண சாதனக் கையளிப்பு என்பவற்றின் பயனாக அதற்கு உரித்தாக்கப்படக் கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை எடுத்தல், வைத்திருத்தல் அல்லது வேறுவகையாகக் குறித்தொதுக்குதல், கொடுத்து மாற்றுதல், அல்லது வேறுவகையாக அதனைக் கையளித்தல் ;

(ஈ) வரவுசெலவுத் திட்டத்தை அங்கீகரித்தலும், நிலையத்தின் நிதிசார் நிலைமைகளையும் பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்படக்கூடிய வாறான நிலையத்தின் அத்தகைய முன்னேற்ற அறிக்கைகளையும் மீளாய்வுசெய்தலும் ;

(உ) நிலையத்தின் நிருவாகத்துக்கான நிதிகளைத் திரட்டுதலும் நிலையத்தை இயக்குவதற்காக உள்ளூர் அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து காசாகவோ பொருளாகவோ நன்கொடைகளையும் மானியங்களையும் கொடைகளையும் பெறுதலும் ;

(ஊ) செய்தித் தொடர்பு மற்றும் கணனித் தொழினுட்பவியல்களையும் சக்தி கற்கைகளையும் ஊக்குவிப்பதற்கான நிதியமொன்றைத் தாபித்தல் ;

(எ) ஏதேனும் பிரயோகிக்கப்படாத வருமானம் உட்பட நிலையத்துக்குச் சொந்தமான ஏதேனும் பணத்தை, நம்பிக்கைப் பொறுப்புகள் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் இலங்கையில் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனை செய்வதில் எவையேனும் அத்தகைய பணங்களை முதலீடு செய்தல் சட்டபூர்வமானதாகவுள்ள ஏதேனும் பிணைப்பொறுப்பில் முதலீடு செய்தல், அம்முதலீடுகளை வேறுபடுத்தல் அல்லது உடனடிச் செலவினத்துக்குத் தேவைப்படாத அப்பணங்களின் ஏதேனும் பாகத்தை ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பில் இடுதல்.

(ஏ) இலங்கையிலாயினுஞ்சரி வெளிநாட்டிலாயினுஞ்சரி நிலையத்தின் குறிக்கோள்களை முழுமையாக அல்லது பகுதியளவில் ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள கல்விசார் அல்லது வேறு நிறுவனங்களுடன் ஆளணியினரையும் மாணவர்களையும் பரிமாற்றஞ் செய்வதற்காகவும் அவர்களது பொதுக் குறிக்கோள்களுக்கு உசிதமாகக்கூடியவையான அத்தகைய நோக்கங்களுக்காகப் பொதுவாகவும் உடன்படிக்கை செய்துகொள்ளுதல் ;

(ஐ) நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு நியமனங்களைச் செய்தல்;

(ஒ) நிலையத்தினால் ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளை அறவிடுதல் அல்லது ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல்;

(ஓ) அதன் தத்துவங்களுள், கடமைகளுள் அத்துடன் பணிகளுள் எதனையும் பணிப்பாளருக்கு, பிரதிப் பணிப்பாளருக்கு, பேரவைக்கு அல்லது குழுக்களுக்குக் கையளித்தல்,

(ஔ) நிலையத்தின் அலுவல்களை முகாமை செய்தல் தொடர்பிலான விதிகளை ஆக்குதல்; அத்துடன்

(க) நிலையத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

10. சபையானது இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ள அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ள எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம். விதிகளை ஆக்குவதற்குச் சபைக்குள்ள தத்துவம்.

11. (1) சபையானது, அதன் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் சபைக்கு உதவியளிக்கும் நோக்கத்துக்காகவும் ஆலோசனையளிக்கும் நோக்கத்துக்காகவும், சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுக்கும் நோக்கத்துக்கு அவசியமானதெனச் சபை கருதும் ஏதேனும் விடயத்தில் அல்லது எல்லா விடயங்களிலும் சபைக்கு உதவியளிக்கும் நோக்கத்துக்காகவும் அது அவசியமானதெனக் கருதக்கூடியவாறான தொழினுட்ப ஆலோசனைப் பேரவையொன்றையும் குழுக்களையும் நியமிக்கலாம். பேரவை ஒன்றையும் குழுக்களையும் நியமிப்பதற்குச் சபைக்குள்ள தத்துவம்.

(2) தொழினுட்ப ஆலோசனைப் பேரவையானது சபை அதன் கொள்கையை உருவாக்குவதில் அதற்குப் பொதுவாக உதவியளித்தல் வேண்டுமென்பதுடன் சபையின் கொள்கைகளையும் முடிவுகளையும் நடைமுறைப்படுத்துவதிலும் நிறைவேற்றுவதிலும் பணிப்பாளருக்கு உதவியளித்தலும் வேண்டும்.

(3) நிலையத்தின் பணிப்பாளர் தொழினுட்ப ஆலோசனைப் பேரவையின் பதவிவழித் தவிசாளராதல் வேண்டும்.

(4) நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் தொழினுட்ப ஆலோசனைப் பேரவையின் பதவிவழித் துணைத் தவிசாளராதல் வேண்டும்.

(5) பல்கலைக்கழக மூதவையினால் தீர்மானிக்கப்படும்வாறாக, மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் இயைபான கற்கைநெறிகளில் உள்ள இரண்டு பேராசிரியர்கள் தொழினுட்ப ஆலோசனைப் பேரவையின் பதவிவழி உறுப்பினர்களாதல் வேண்டும்.

(6) தொழினுட்ப ஆலோசனைப் பேரவையினதும் இப்பிரிவின்கீழ் தாபிக்கப்படும் ஒவ்வொரு குழுவினதும் பதவிக்காலமும் குறிப்பான தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(7) தொழினுட்ப ஆலோசனைப் பேரவையினதும் குழுக்களினதும் கூட்டங்களின் கூட்ட நடப்பெண் உட்பட, அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை தொடர்பிலான விதிகளைச் சபை ஆக்கலாம்.

அமைச்சர் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளை விடுத்தல்.

12. அமைச்சர் காலத்துக்குக்காலம் சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளை சபைக்கு விடுக்கலாம்.

## பாகம் III

## பணியாட்டொகுதியினரின் நியமனமும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் ஏனைய கருமங்களும்

நிலையத்தின் பணிப்பாளரையும் பிரதிப் பணிப்பாளரையும் ஏனைய அலுவலர்களையும் நியமித்தல்.

13. (1) சபையானது—

(அ) நிலையத்தின் பணிப்பாளரையும்,

(ஆ) நிலையத்தின் பிரதிப் பணிப்பாளரையும்,

(இ) நிலையத்தின் பேராசிரியர்களையும்,

நியமித்தல் வேண்டும்.

(2) கல்விசார் மற்றும் ஆராய்ச்சி அனுபவமுள்ள ஆட்களுள்ளிருந்து பணிப்பாளர் பதவிக்குத் தெரிவுசெய்கின்றவிடத்து, பிரதிப் பணிப்பாளருக்கான தெரிவு தொழில்புரியும் உயர்தொழில் எந்திரிகளுளிருந்து செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் மறுதலையாக, தொழில்புரியும் உயர்தொழில் எந்திரிகளுளிருந்து பணிப்பாளர் தெரிவுசெய்யப்படுகின்றவிடத்து, பிரதிப் பணிப்பாளர் பதவிக்கான தெரிவு கல்விசார் மற்றும் ஆராய்ச்சி அனுபவமுள்ள ஆட்களுளிருந்து செய்யப்படுதல் வேண்டும். இவ்விரு சந்தர்ப்பத்திலும், அனுபவமானது நிலையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கற்கைநெறிகளுள் ஒன்று அல்லது பல தொடர்புபட்டதாக இருத்தல் வேண்டும்.

நிலையத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனங்கள் தொடர்பில் சபைக்குள்ள தத்துவங்கள்.

14. சபையானது—

(அ) பிரிவு 13, உட்பிரிவு (1) இன் கீழ் சபையினால் நியமிக்கப்படும் வாறான நிலையத்தின் பணியாட்டொகுதியினரை நியமித்தல், பதவியிலிருந்து விலக்குதல், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் ஆகிய தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் :

ஆயின், சபையானது நியமிப்பதற்கும் பதவியிலிருந்து விலக்குவதற்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்குமான அதன் தத்துவங்களை இதனகத்துப் பின்னர் காட்டப்பட்டவாறாக பணிப்பாளருக்குக் கையளிக்கலாம் ;

(ஆ) பணியாட்டொகுதியினரின் கூலிகளை அல்லது சம்பளங்களை அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிக்கலாம் ;

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை, நியதி, நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம் ;

(ஈ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அதன் ஊழியர்களுக்காக அச்சட்டத்தின்கீழ் உதவுதொகைகளுக்கு ஏற்பாடுசெய்யலாம்.

15. (1) பணிப்பாளர்— பணிப்பாளரதும் பிரதிப் பணிப்பாளரதும் தத்துவங்கள்.

(அ) சபையின் கொள்கைகளுக்கும் முடிவுகளுக்கும் இணங்க நிலையத்தின் முகாமைக்கும் நிருவாகத்துக்கும் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) அவருக்குக் கையளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் ;

(இ) பேராசிரியர் தவிர்ந்த நிலையத்தின் கல்வித்துறைசார் பணியாட்டொகுதியினரை நியமித்தல் வேண்டும் ;

(ஈ) நிலையத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறானவர்களான அத்தகைய அலுவலர்களையும் ஏனைய ஊழியர்களையும் நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல் வேண்டும் ; அத்துடன்

(உ) நிலையத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும்.

(2) (அ) பிரதிப் பணிப்பாளர், சட்டத்தின்கீழ் பணிப்பாளரது தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் பணிப்பாளருக்கு உதவி அளித்தல் வேண்டும் ;

(ஆ) சபையானது குறிப்பான தத்துவங்களையும் கடமைகளையும் பிரதிப் பணிப்பாளருக்குக் கையளிக்கலாம் ; அத்துடன் அவற்றுக்கு அவர் சபைக்கு நேரடியாகப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் ஆகியோரது ஊதியம் உட்பட, தொழில் நியதி, நிபந்தனைகள் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

16. (1) சபையினது வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் அல்லது தோதான அமைச்சினது செயலாளரினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம். பகிரங்க அலுவலர்களையும் உள்ளூராட்சிச் சேவையாளர்களையும் நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிலையத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்தவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவை புரிவதாக அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ளவரான எவரேனும் ஆளைச் சபை தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால் நிலையத்துக்கு ஆற்றப்படும் ஏதேனும் சேவைக் காலப்பகுதி அவ்வொப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) சபையினது வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலர் அல்லது ஊழியரினதும் விடயத்துக்கேற்றுற்போல, உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையினது அல்லது அந்த அதிகாரசபையினதும் சம்மதத்துடன் அதே சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது சபையினாலும் உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையினாலும் அல்லது அந்த அதிகாரசபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் உட்பட, அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

## பாகம் IV

### நிலையத்தின் கல்வித்துறைகளும் கல்வித்துறைசார் பணியாட்டொகுதியினரும்

நிலையத்தின் கல்வித்துறைகள்.

17. நிலையமானது சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான (இதனகத்துப் பின்னர் "கல்வித்துறைகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய கல்வித்துறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கல்வித்துறைகளில் கல்வித்துறைசார் பணியாட்டொகுதியினர்.

18. ஒவ்வொரு கல்வித்துறையினதும் பணியாட்டொகுதி பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பேராசிரியர்கள் ;

(ஆ) ஆராய்ச்சி இணையுறுப்பினர்கள் ; அத்துடன்

(இ) சபையினால் முடிவுசெய்யப்படும்வாறான ஏனைய பகுதிகள்.

19. ஏதேனும் கற்கைத்துறையின் பேராசிரியர், பேராசிரியர் என்ற அவரது பணிகளைப் புரிவதோடு மேலதிகமாக பணிப்பாளராக அல்லது பிரதிப் பணிப்பாளராகப் பணிபுரியலாம். **பேராசிரியர் பணிப்பாளராக அல்லது பிரதிப் பணிப்பாளராகப் பணிபுரிதல்.**

20. பணிப்பாளரும், பிரதிப் பணிப்பாளரும் எல்லாக் கற்கைத்துறைகளையும் சார்ந்த பேராசிரியர்களும், ஆராய்ச்சி இணையுறுப்பினர்களும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏனைய வகுதியினரும் சேர்ந்து நிலையத்தின் உயர் தொழிற் பணியாட்டொகுதியினராக அமைதல் வேண்டும். **நிலையத்தின் உயர்தொழில் மற்றும் கற்கைத்துறைப் பணியாட்டொகுதி.**

## பாகம் V

### நிதி

21. நிலையமானது இலங்கையிலுஞ்சரி வெளிநாட்டிலுஞ்சரி எம்மூலத்திலிருந்தும் மானியங்களைப்பெற உரித்துடையதாதல் வேண்டும் என்பதுடன் அதன் இலக்குகளையும் குறிக்கோள்களையும் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக, கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி, கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி ஏதேனும் தனியான நிறுவனத்துடன் அல்லது ஆட்கள் குழுவுடன் கொடைகளுக்காக நேரடியாகப் பேச்சுவார்த்தை செய்வதற்கு உரித்துடையதாதலும் வேண்டும். **நிலையம் எந்த மூலத்திலிருந்தும் மானியங்களைப் பெற உரித்துடையது என்பது.**

22. அரசாங்கமானது நிலையத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக போதிய மானியம் ஒன்றை ஆண்டுதோறும் நிலையத்துக்கு நன்கொடையாகக் கொடுக்கலாம். **அரசாங்க மானியம்.**

23. (1) நிலையம் அதன் சொந்த நிதியத்தை வைத்திருத்தல் வேண்டும். **நிலையத்தின் நிதியங்கள்.**

(2) நிலையத்தின் நிதியத்துக்குள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) நிலையத்தைத் தாபிப்பதுடன் சம்பந்தப்பட்டவையான அத்தகைய ஒழுங்கமைப்புக்களினால் ஏற்பாடுசெய்யக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) நிலையத்தின் பயன்பாட்டுக்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) நிலையத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் நிலையத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஈ) இலங்கையிலும்சரி வெளிநாட்டிலுஞ்சரி எத்தன்மைத்தான எம்மூலத்திலிருந்தேனும் கடன்கள், நன்கொடைகள், கொடைகள், அல்லது மானியங்கள் என்பன மூலமாக நிலையத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா பணத்தொகைகளும் :

ஆயின், எவ்வாறாயினும், குறித்த நோக்கங்களுக்காகச் செய்யப்படும் மானியங்களிலிருந்து அல்லது குறித்த குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து பெறப்படும் ஏதேனும் வருமானம் நிலையத்தின் கணக்குகளில் வேறாகக் கணக்குக் காட்டப்படுதல் வேண்டும்; அத்துடன், நிலையத்தின் பொதுநோக்கங்களுக்கான அல்லது எந்நோக்கங்களுக்காக அல்லது எக்குறிக்கோள்களுக்காக அத்தகைய மானியங்கள் அல்லது அறக்கொடைகள் முறையே செய்யப்பட்டனவோ அந்நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் தவிர்ந்த ஏதேனும் நோக்கத்திற்காக அல்லது குறிக்கோள்களுக்காக அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படுதல் ஆகாது.

*நிதியத்திலிருந்து செய்யப்படும் கொடுப்பனவுகள்.*

24. நிலையத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் நிலையத்தினால் உறப்படும் ஏதேனும் செலவினத்தை கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் அத்தகைய பணத்தொகைகள் எல்லாவற்றையும் நிலையத்தின் நிதியங்களிலிருந்து கொடுத்தல் வேண்டும்.

*நிதியத்தின் பணங்களை மீளப்பெறுதலும் முதலீடு செய்தலும்.*

25. நிலையத்தின் நிதியத்திலிருந்து ஏதேனும் பணத்தை மீளப்பெறும் விதமும் முறையும் நிதியத்தின் ஏதேனும் பணத்தை முதலீடுசெய்தலும் அந்நோக்கத்துக்கென காலத்துக்குக்காலம் ஆக்கப்படக்கூடிய அத்தகைய விதிகளுக்கிணங்க சபையினால் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விதிகளுக்கிணங்கவல்லாது அப்பணத்தொகை எதுவும் மீளப் பெறப்படுதல் ஆகாது.

*உள்ளூரதிகார சபையினால் விதிக்கப்படும் வீதவரிகளையும் வரிகளையும் கொடுப்பதிலிருந்து நிலையம் விலக்களிக்கப்படுதல்.*

26. நிலையமானது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையினால் விதிக்கப்படும் எவையேனும் வீதவரிகளையும் வரிகளையும் கொடுப்பதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

*நிலையத்தின் நிதி ஆண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.*

27. (1) நிலையத்தின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாதல்வேண்டும்.

(2) சபையானது நிலையத்தின் வரவு செலவு தொடர்பிலும், சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பிலும், மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலுமான முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருப்பித்தல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*